விலை சதம் 25 ★ ★

# ஈழநாடு

மலர்: 15 | The Kelanadu | இதழ்: 361
யாழ்ப்பாணம் | தை 27 | முஹறம் 15 | சனிக்கிழமை | 9—2—74

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY 11 FEB 1974

''டாம்பீக வாழ்வு கொண்டுவரும் தாழ்வு''
''சிக்கனமே சிறந்த செல்வம்''
சிக்கனத்திற்கு
மில்க்வைற் சலவைப் பவுடர்
வாங்கிப் பாவியுங்கள்:
மில்க்வைற் சலவைப் பவுடர்
ஒரு பைக்கட் 50 சதம் மட்டுமே.
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த பெ. எண். 77.
யாழ்ப்பாணம்.

# பாடசாலைகள் யாவும் வெறிச்சோடிக் கிடந்தன

## அமைதியாக நடந்த மாணவர் பகிஷ்கரிப்பு

— நமது நிருபர் ஏ. தேவராசா —

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றும் பாடசாலைகளும், கல்லூரிகளும் வெறிச்சோடிக் கிடந்தன. பாடசாலைக் கட்டிடங்களில் ஆசிரியர்களைத் தவிர வேறு எவரையும் காணக்கூடியதாக இருக்கவில்லை.

யாழ்குடாநாடு எங்கும் ஆயுதம் தரித்த பொலிசாரைக் காணக்கூடியதாகவிருந்தது. பொலிசாரின் ரோந்து நடவடிக்கையும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

யாழ் நகரத் தெருக்களிலும் மாணவர்கள் காணப்படவில்லை. பொதுவாக யாழ். நகரில் எல்லா இடங்களிலுமே அமைதியாகவிருந்தது. தமிழ் இளைஞர் பேரவையும், தமிழ் மாணவர் விடுதலை அணியும் விடுத்த கோரிக்கையின் பேரில் நேற்று மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தார்கள்.

யாழ் மாவட்டத்தில் உள்ள சிங்கள பாடசாலைகளும் நேற்று வெறிச்சோடிய நிலையிலேயே காணப்பட்டன.

இங்குள்ள கல்லூரிகள், பாடசாலைகள் அனைத்திலும் மாணவர்கள் வராததினால் ஆசிரியர்கள் அனைவரும் தமக்கென பாடசாலைகளில் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட பொழுதுபோக்கு அறையிலேயே இருந்தார்கள். சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் பாடசாலையில் உள்ள நூல் நிலையத்தையும், பழைய பயில்களையும் துப்பரவு செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள்.

சில பாடசாலைகளின் விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களே வகுப்பறைகளில் காணப்பட்டார்கள். வீதிகளில் இருந்து சென்ற சில மாணவர்கள் தமது பாடசாலைகளில் மாணவர்களை காணாததினால் ஏமாற்றத்துடன் வீட்டுக்குத் திரும்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்பட்டது.

யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்திலும் பிள்ளைகளின் வரவு குறைவாகவே காணப்பட்டது. ரயில்களிலும், பாடசாலை பஸ்களிலும் தனியார் வாகனங்களிலும் பாடசாலைக்கு வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்பட்டது.

யாழ்ப்பாணம் சிங்கள மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்பாக ஆயுதம் தாங்கிய பொலிசார் காவலில் ஈடுபட்ட வண்ணம் இருந்தார்கள்.

வீதிகளிலும் பாடசாலை மாணவர்களின் நடமாட்டம் காணப்படவில்லை. வீதியில் காணப்பட்ட இரு தனியார் பாடசாலைச் சிறுவர்களை நமது நிருபர் விசாரித்தபோது தாம் பாடசாலைக்குச் சென்றதாகவும், அங்கு மாணவர்கள் வராததினால் தம்மை காலை 10 மணிக்குப் பின் வீட்டுக்குப் போகும்படி ஆசிரியர்கள் கூறிவிட்டதாகவும் கூறினார்கள்.

பொலிசார் ஜீப் வண்டிகளில் பாடசாலைகளைச் சுற்றி அடிக்கடி ரோந்து சுற்றிய வண்ணமே இருந்தார்கள்.

நேற்று மத்தியானம் வரை யாழ் நகர் வீதிகளில் எதுவித அசம்பாவிதங்களும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

# யாழ் நகரில் இன்று ஹர்த்தால் கதவடைப்புடன் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், சனி

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாள் அசம்பாவிதத்தின் போது உயிர்நீத்த 9 பேருக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக அவர்கள் மரணமான 31-ம் நாளாகிய இன்று யாழ். குடாநாடு எங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. தமிழர் கூட்டணி இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தமிழர் கூட்டணியைச் சேர்ந்த திரு. எஸ். கதிரவேற்பிள்ளை எம். பி., திரு. வி. ஆனந்தசங்கரி எம். பி. திரு. வி. நவரத்தினம் எம். பி., திரு. சிவசிதம்பரம் முன்னாள் செனட்டர் திரு. நடராசா, திரு. குமரகுரு, புறக்டர் விஸ்வநாதன் ஆகியோர் நேற்று மாலை 4 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நின்று ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரும் ஆண்டுப் பிரசுரங்களைப் பகிரங்கமாக விநியோகம் செய்தனர்.

கடந்த 9-ம் திகதி சம்பவத்தின் போது உயிர்நீத்தவர்கள் இறந்த இடமான வீரசிங்கம் மண்டபத்திற்குமுன் மலர் தூவி அஞ்சலி செலுத்திவிட்டு உண்ணாவிரதம் ஆரம்பமாகும் என்று தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

முனியப்பர் கோவில் முன்றலில் ஆரம்பமாகும் உண்ணாவிரத முடிவில் கூட்டம் ஒன்று நடைபெறும். அதில் தலைவர்கள் உரையாற்றுவார்கள் என்றும் அவர் சொன்னார்.

குடாநாட்டில் உள்ள சகல வியாபார நிலையங்களையும், ஹோட்டல்களையும் பூட்டி வைத்து, அமைதியான முறையில் இன்றைய தினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு தமிழர் கூட்டணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

சினிமாக்காட்சிகளையும் இன்று நிறுத்தி துக்கம் அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஈ)

## யாழ்ப்பாணத்திலிருந்து கேதீஸ்வரத்துக்கு சிவராத்திரி பஸ் சேவையில்லை

(யாழ்ப்பாணம், சனி)

இம்முறை சிவராத்திரி விழாவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீஸ்வரத்திற்கு எவ்வித விசேஷ பஸ் சேவையும் இராது என்று இ. போ. சபை யாழ். டிப்போ சுப்ரீண்டனர் திரு. பற்குணம் தெரிவித்தார்.

கடந்த ஆண்டுகளில் கேதீஸ்வர யாத்திரிகர்களின் நலன் கருதி சிவராத்திரி விழாவுக்கு விசேஷ பஸ்கள் திருக்கேதீஸ்வரத்திற்கு விடப்பட்டதாகவும், யாழ்ப்பாணமிருந்து மன்னார் செல்லும் பஸ்களும் கேதீச்சர ஆலயம் சென்றே மன்னார் சென்றுவந்ததாகவும், கடந்த ஆண்டுகளைப்போல் இங்கிருந்து கேதீச்சரத்திற்கு பாடசாலை மாணவர்களுக்காக விடப்பட்ட பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கேதீஸ்வர யாத்திரிகர்கள் ரயில் மூலம் பிரயாணம் [illegible] வசதியானதென்று டிப்போ சுப்ரீண்டன்ட் தெரிவித்தார். [ஈ]

# சந்திரசேகரா வந்த ஜீப்புக்கு கைக்குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், சனி

உதவிப்பொலிஸ் அதிபர் திரு. கே. சந்திரசேகரா சென்று கொண்டிருந்த ஜீப் ஒன்று கைக்குண்டு வீச்சுக்குள்ளானது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு தெல்லிப்பளையில் நடைபெற்றது.

உதவிப் பொலிஸ் அதிபர் காயம் எதுவுமின்றித் தப்பினார். நேரடியாக கன்னும் பொலிஸ் நிலையம் சென்ற உதவிப் [illegible] சந்திரசேகரா [illegible] பொலிஸாருடன் ஸ்தலத்திற்குச் திரும்பிச்சென்று பார்த்தபோது சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகில் இருந்த மதகொன்றிலிருந்து குண்டு தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படுத்தப்படும் வோத்தல் ஓடுகள், ஊசி, தகரங்கள் போன்ற [illegible] மீட்டதாகச் சொல்லப்படுகிறது.

இதுசம்பந்தமாக எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தே போது இச்சம்பவம் நடந்தது. ஜீப்பில் சந்திரசேகரா மட்டுமே இருந்ததாகவும், அவரே அதனைச் செலுத்தி வந்ததாகவும் கூறப்பட்டது. (ஈ)

(5-ம் பக்கம் பார்க்க)

## ஜீ. சி. ஈ. பரீட்சை முடிவு இன்று

கொழும்பு, சனி

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் இன்று வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது. இன்றும் நாளையும் தபால் விநியோகம் இல்லையாதலால், சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் திங்கட்கிழமை கிடைக்குமென்று அறிவிக்கப்பட்டது. [ஈ]

கிரிக்கட்

## இந்தியா 3—283

(கொழும்பு, வெள்ளி)

இந்தியக் கிரிக்கட் கோஷ்டிக்கும் இலங்கைக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட்போட்டியில் இந்தியக் கோஷ்டி 3 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 283 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தியக் காப்டன் அஜித் வடேகர் 89 ஓட்டங்களை எடுத்திருந்தார். மன்ஹாட் 67 ஓட்டங்களுடனும் பீ. சர்மா 60 ஓட்டங்களுடனும் ஆட்ட நேர இறுதிவரை ஆடிக் கொண்டிருந்தனர்.

## அனுரா உரை

யாழ்ப்பாணம், சனி

வண்ணார்பண்ணை தென்கிழக்கு கிராமசேவகர் அலுவலகத்தில் உள்ள பண்டாரநாயக்கா கிராமதான சங்கத்தில் திரு. அனுராபண்டாரநாயக்கா நாளைக்காலை 10மணிக்கு உரையாற்றுவார். கிராம சேவையாளர்களுக்குள்ள குறைகள்பற்றி அவர் நேரில் ஆராய்வார். (ஈ)

## இன்று 'ஈழநாடு' விசேஷ பதிப்பு

இன்று மாலை ஐந்து மணியளவில் 'ஈழநாடு' விசேஷ பதிப்பு ஒன்று வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

### கல்வி

ஜி. சி. ஈ. உயர்தர G.C.E.) A.L) வகுப்புக்கள் ஆங்கில இலக்கியத்திலும் மற்றும் கலைப் பாடங்களிலும், தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றன. பிராஜ்மன் என்ரப்பிறைசஸ், தையல் முத்து மாளிகை, 213/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 171

### இலவசம்

ஜி.சி.ஈ. (சாதாரண/உயர் தரங்களுக்கு) வர்த்தக, கலை, விஞ்ஞான பாட விளக்கப் போதிக்கும் "தொலைதூர கல்வி" இன்ஸ்ரிரியூட்டின் வழங்குகிறார்கள். முத்திரையிட்ட அஞ்சலுறை 70, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்திற்கு அனுப்பவும். 194

### வைத்தியம்

ஹோமியோபதி நான்கு வருட தினசரிவகுப்புகள் நடைபெறுகிறது. விபரங்களுக்கு நேரில் வரவும். அதிபர், வட இலங்கை ஹோமியோபதி கல்லூரி, 74, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 919

### வாடகைக்கு

யாழ் நகரில் மத்திய ஸ்தாபனங்களின் அண்மையில் தங்க அறைகள் ஆண்களுக்கு மட்டும் உண்டு. நியாயமான சலார். உணவு வசதிகள் தேவைக்கேற்றபடி விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 927. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 927

### விற்பனைக்கு

E L மொறிஸ் மைனர் ஓவர் லெட் என்ஜின 153/D சென் பீற்றேஸ் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (கல்விக்கந்தோர் அருகே) ஞாயிற்றுக்கிழமை 10-ந் திகதி பார்வையிடலாம். 946

சொந்தப்பாவிப்பில் உள்ள E. L. 631 இல்மன் கார் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு டாக்டர் அ. பொன்னம்பலம், ஆனைக்கோட்டை. 948

வசதியான வீடு, குழிலை கடம் முதலியவற்றுடன் ஒன்றேகால் பரப்புக் காணி ஆனைக்கோட்டை ஆருகாக் மடம் வைரவர் கோவில் ஒழுங்கையில் விற்பனைக்கு உண்டு. கேற்கூறிய விலாசத்தில் நேரில் தொடர்பு கொள்க-செ. தம்பிஐயா. 949

### மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

மேற்படி சங்கத்தில் வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு உண்டு. விண்ணப்பங்கள் 12-2-74 செவ்வாய்க்கிழமை பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல விபரங்களும் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்
மானிப்பாய் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்,
ஆனைக்கோட்டை
187

### தேவை

இயந்திர வள்ளம் அமைக்க தொழிலாளர் தேவை. பழக விரும்புவோருக்கும் இடமுண்டு. தச்சுவேலை தெரிந்தவர்கள் விரும்பப்படுவர். திறமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப உழைக்க வசதியுண்டு. விண்ணப்பிக்கவும்: செல்வம் வள்ளச்சாலை, முல்லைத்தீவு. 958

நல்ல பாவிப்பிலுள்ள 7 1/2 H.P. மோட்டர், நம். I அல்லது நம். 7 ஹல்லர், சோமசிறி ஹல்லர், மில்வேலை அனுபவமுடையவர்கள் உடனடியாகத் தேவை. சாந்தி அரிசி ஆலை, வட்டுக்கோட்டை. 950

தொழில் நுட்பக் கல்லூரியில் மெஷனிங் பயிற்சி பெற்ற ஒருவர் உடனடியாகத்தேவை. அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். சேவி-கண்ணாடி அண்ட் உலோகத் தொழிற்சாலை, நீர்வேலி. 951

நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருத்தக்கூடியவரும் வைசிக்கின் பூட்டக்கூடியவருமான திறமை வாய்ந்த அனுபவமுள்ள ஒரு நபர் உடனே தேவை. நேர்மையைக் குறித்து நற்சான்றும் பத்திரங்களுடன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். சிலோன் மேர்சன்ஸ் லிமிட், 484, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 953

### விற்பனைக்கு

றேடியோ திருத்தும், பரிட்சிக்கும் கருவிகள், உப உறுப்புகள். காற்றாடி சீலிங்(G.E.C.), B. S. R. [illegible] குளிர்சாதனப்பெட்டி திருத்துவதற்குத் தேவையான கருவிகள், ஸ்பிறே பெயின்டிங் மெஷின், கொம்பிரசர் மெசின், மீற்றர்கள். கடைக்குத் தேவையான சோக்கேஸ்கள் விற்பனைக்குண்டு. நியூட்டன் ரான்ஸிஸ்டர் றேடியோ சேவிஸ், 76, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 955

## ரெண்டர் கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும் வேலையைச் செய்வதற்கு கிளிநொச்சி பட்டண விசேட ஆணையாளரால் 28-2-74 வியாழக்கிழமைகாலை 10-00 மணிவரைக்கும் ரென்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பிட்ட வேலைக்குப் பிணைப்பணமாக ரூபா 50/-ம், பத்திரப்பணமாக ரூபா5/-ம் செலுத்தி காரியாலயத்தில் வழங்கப்படும் பத்திரத்தில் கேள்விகள் முறைப்படி நிரப்பப்பட்டு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

ஏனைய விபரங்கள் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

வேலை:- 1. குமரபுரம் வீதி திருத்தம்.

க. நல்லைநாதன்,
விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி. 1974-02-07.
190

### விற்பனைக்கு

"ஹிஸ் மாஸ்ரேஸ் வொயிஸ்" கிராமபோன் பெட்டி விற்பனைக்குண்டு. மாலை 6-00 மணிக்கு பின்னர் பார்வையிடலாம். அரசரட்ணம், 383, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 957

8 ஏக்கர் நெற்பரப்புக் காணியும் 2 ஏக்கர் தோட்டக்காணியும் விற்பனைக்கு உண்டு. புதிய பெரிய கிணறும் உண்டு. வயலுக்கு தண்ணீர் இறக்க (துரிசு வசதியுடன்) 50 யாருக்குள் குள வசதியும் உண்டு. இடம்: மூன்று முறிப்பு, மாங்குளம் விலை விசயத்திற்கு நேரில் தொடர்பு கொள்ளவும். S. அப்துல்காதர், 17/3, கலீஃா வீதி, யாழ்ப்பாணம். 956

### சாவகச்சேரி ப.நோ. கூ. சங்கம்

## சாக்கு விற்பனைக் கேள்வி விளம்பரம்

இச்சங்கத்தில் 15000(பதினையாயிரம்) வெற்றுச்சாக்குகள் விற்பனைக்கிருக்கின்றன. இவற்றை மொத்தமாக கொள்வனவு செய்ய விரும்புவோரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் சங்கத்தால் வழங்கப்படும் கேள்விப் பத்திரங்களில் 15-2-74 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்சீல் இட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் "சாக்கு கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டு பதிவுத்தபாலில் சங்கத்திற்கு சேர்க்கப்படவேண்டும்.

கேள்விப் பத்திரம் ஒவ்வொன்றிற்கும் ரூபா 200/- வைப்புப் பணமும், கேள்விப்பத்திரப்பணம் ரூபா 3/-ம் செலுத்தி 14-2-74 பிற்பகல் 4 மணி வரையும் சங்க காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
சாவகச்சேரி ப. நோ. கூ.
சங்கம்,
சாவகச்சேரி.

சாவகச்சேரி,
7-2-74. 189

## வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 13000 வரையிலான வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன. இதற்கான கேள்வி விண்ணப்பங்கள் யாவும் சங்கத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் பூர்த்திசெய்யப்பட்டு முத்திரை இடப்பட்ட உறைகளில் வைத்து 15- 2- 74 வெள்ளிக்கிழமை 12 மணிக்கு முன்னதாகச் சங்கக்காரியாலயத்திற் சேர்க்கப்படவேண்டும். விண்ணப்பத்திற்குரிய வைப்புப்பணம் ரூபா 250/-ஆகும்.

இங்ஙனம்
பொதுமுகாமையாளர்,
அளவெட்டி மல்லாகம்
ப.நோ.கூ.சங்கம்.
176

## புனரமைப்பு

(புங்குடுதீவு,வெள்ளி)

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் புனரமைக்கப்பட்டுள்ளது. இம்மாதம் முதல் கூடிய பணியாளர்களுடன் இச்சங்கம் இயங்க ஆரம்பித்துள்ளது. இம் மாதத்திலிருந்து இச்சங்க ஊழியர்கள் அனைவருக்கும் அரச சம்பள விகித அடிப்படையில் ஊதியம் வழங்கப்படவுள்ளது. [illegible] சங்கத்தலைவராக [illegible] திரு. ஏ. தியாகராசா மேற்கொண்டுள்ளார்.

### பாடசாலை கிரிக்கெட் போட்டிகள்

# சென். ஜோன்ஸ் இன்னிங்ஸால் வெற்றி!

## யாழ். இந்துவிடம் பற்றிக்ஸ் தோல்வி

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்ட பாடசாலைகளிடையே கடந்த இருதினங்களாக நடைபெற்ற கிரிக்கட் போட்டிகளில், யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரியை இன்னிங்ஸ் வித்தியாசத்தாலும், யாழ். இந்துக்கல்லூரி சென்.பற்றிக்ஸ் கல்லூரியை 6 அதிகப்படியான விக்கெட்டுகளாலும் வெற்றிபெற்றன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 261 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விஜித் சின்னையா 58 ஓட்டங்களையும், அலெக்ஸ்சாண்டர் 64 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 62 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 134 ஓட்டங்களையும் பெற்றது. சென்.ஜோன்ஸ் கல்லூரி பந்துவீச்சு வீரர் எஸ். ரவீந்திரன் முதல் இன்னிங்ஸில் 26 ஓட்டங்களைக்கொடுத்து 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இப்போட்டி சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### சென். பற்றிக்ஸ் தோல்வி

யாழ் இந்துக்கல்லூரி சென். பற்றிக்ஸ் கல்லூரியை 6 அதிகப்படியான விக்கெட்டுகளால் மிக இலகுவாக வெற்றி பெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 81ஓட்டங்களைப்பெற்றது. இந்துக் கோஷ்டியின் காப்டன் வை. நரேன் 16 ஓட்டங்களைக்

(5-ம்பக்கம் பார்க்க)

## நூல் மதிப்புரையின் தாதா

இலங்கைச் சர்வகலாசாலையின் முதல் வெளியீடாகிய "சிலோன் யூனிவர்ஸிட்டி றிவியூ" வெளிவந்தபோது ஈழத்தேசக் கவிகள்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கு மதிப்புரை கூறுவாரைக் காணக் கஷ்டப்பட்ட சர்வகலாசாலை, டாக்டர் சரத்சந்திரா, தலையாளி திரு. வ. கந்தையாவையே மதிப்புரை கூறும்படி வேண்டினர். தலையாளியாரின் மதிப்புரை திரு. ஹண்டி பேரின்பநாயகம் அதிபராயிருந்த 'கேசரி'யில் வெளிவந்தது. இதில் பாளி, சிங்களம், சமஸ்கிருதம், மேல்நாட்டுக் கீழ்நாட்டுத் தரிசனக்களை ஆராய்ச்சி, தமிழாராய்ச்சி முதலியன இடம் பெற்றுள்ளன.

'ஈழகேசரி'யில் வந்த தலையாரியாரின் மதிப்புரைகளோ பல. பண்டிதமணி கதிரேசன் செட்டியாரின் இருச்சதகத்திற்கு எழுதிய மதிப்புரை வாதத்தினைக் கிளப்பியது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஒளவை துரைச்சாமிப்பிள்ளையும் வெள்ளைவாரணரும் பண்டிதமணி பக்கமாக எழுதினர். தலையாளியார் பக்கம் டாக்டர் வி. பொன்னையாரும் பிறரும் எழுதினர். வாதம் நடத்தும்போது தலையாளியார் விஷயத்தைமட்டும் எழுதி ஆளைத் தாக்காது செல்வர்.

கொழும்பு வானொலி நிலையத்தில் பதினெட்டு வருடம் தமிழ், சமஸ்கிருத, ஆங்கில நூல்களுக்குத் தமிழில் மதிப்புரை கொடுத்துவந்தவரும் இவரே. காய்தல் உவத்தல் இன்றி மதிப்புரை கூறும் தன்மையுடையவர் இவர்.

கடந்த 3-ம் திகதி ஞாயிறன்று இறந்த அவர் ஆன்மா சாந்தி அடைவதாக.

—மக்கள் கவிமணி
மு. இராமலிங்கம்.


## அபிஷேகத் திரவியங்கள்

### சந்தனக் குழம்பு

(மைசூர், அவுஸ்திரேலியா, சந்தனக்கட்டைகளால் தயாரிக்கப்பட்டவை.)

0 பழனி வாசனை விபூதி
0 அபிஷேக குங்குமம்
0 பஞ்சாமிர்த சாமான்கள்
0 நைவேத்திய சாமான்கள்
0 அஷ்டபந்தன மருந்து
0 அத்திபாரமிடும் பொருட்கள்
0 விவாக முகூர்த்த பொருட்கள்

வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்

0 "ராதா" பத்மினி ஜவ்வாது பத்தி
0 99 & 999 ஜவ்வாது பத்தி
0 இந்திராணி பத்தி
0 சக்தி, பூஜா அகர் பத்திகள்
0 மட்டிப்பால் பத்திகள்

விளைவு குடம் சாம்பிராணி
கோவில் தேவைகளுக்கான
சகல விதமான சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
மற்றும் மருந்துகள், மருந்துச்சரக்குகள்
ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தாரின்
தயாரிப்புகள் மலிவாகக் கிடைக்கும்

# எஸ். சுப்பிரமணியம்

## அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்குகள் கோவில் அபிஷேகத்திரவிய வியாபாரம்)

53, கே.கே.எஸ்.றோட். யாழ்ப்பாணம். போன்: 541, வீடு: 7068

160, செட்டியார் தெரு, கொழும்பு-11 போன்: 35825



## வெற்று பரல்கள்

45 கலன் கொள்ளக்கூடிய 44 வெறும் பரல்கள் விற்பனைக்குண்டு. காரியாலய வேலை நாட்களில் பார்வையிடலாம். அத்துடன் கேள்விகள் 28-2-74 வரை எதிர்பார்க்கப்படுகிறது. (கேள்விகள் ஒரு பரல் விகிதமே இருத்தலவசியம்)

விலாசம்:
விற்பனை முகாமையாளர்
சி. எஸ். கே. ஸ்தாபனம்
133 (11) கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவில் வேலை இல்லாக் கஷ்டம்!

(வாஷிங்டன், பெப் 8) எண்ணெய், எரிபொருள் நெருக்கடி காரணமாக உழைப்பாளி மக்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டமும் சம்பள வெட்டும் அதிகரித்துள்ளன.

அமெரிக்க தொழில் இலாகா அறிக்கையொன்று இவ்வாறு கூறுகிறது.

இவ்வறிக்கையின்படி ஜனவரியில் வேலையில்லாத் திண்டாட்டம் உக்கிரமடைந்துள்ளது. 4,700,000 அல்லது 5.7 சதவிகிதமான உழைக்கும் மக்கள் வேலையில்லாது தவிக்கின்றனர். ஜனவரி மாதத்திற்கான புள்ளி விபரத்தின்படி வெள்ளையர் மத்தியில் 4.7 சதவிகிதமும், நீக்ரோக்கள் பிற நிறத்தவர்கள் மத்தியில் 9.4 சதவிகிதமும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் பூராவும் ஏற்பட்ட வேலை நீக்கம் காரணமாகவும் வேலை செய்யும் வாரம் குறுக்கப்பட்டதின் காரணமாகவும் டிசம்பர் சம்பளத்தைவிட ஜனவரியில் தொழிலாளர்களின் சம்பளம் 1 1 சதவிகிதம் வீழ்ச்சியுற்றுள்ளது. சம்பள வீழ்ச்சியுடன் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துவருகிறது.

செனட்டர் வில்லியம் பொக்ஸ்மயர் இதை சுட்டிக்காட்டியுள்ளார். இவர் காங்கிரஸ் கூட்டுப் பொருளாதார கமிட்டியின் உப குழுவொன்றின் தலைவராவார். (டாஸ்)

## ஜாப். விமானம் குவைத்செல்கிறது

சிங்கப்பூர், பெப். 8

சிங்கப்பூரில் படகு ஒன்றைக் கைப்பற்றி அதில் சிலரைப் பணயமாக வைத்துக்கொண்டிருந்த 4 ஆயுதம் தரித்த பயங்கரவாதிகளையும் ஏற்றிக்கொண்டு ஜப்பானிய விமானமொன்று குவைத்துக்குப் புறப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் விமான நிலையத்தில் இவர்கள் தமது பணய ஆட்களை விடுவித்துள்ளனர். ஆனால் அவர்கள் இன்னமும் ஆயுதபாணிகளாகவே உள்ளனர். விமானத்தில் ஜப்பானையும் சிங்கப்பூரையும் சேர்ந்த அரசாங்க அதிகாரிகளும் இருப்பதாகத் தெரிகின்றது. மொத்தம் 20 பேர் விமானத்திலுள்ளனர்.

ஜப்பானிய விமானம் குவைத்தில் இறங்குவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் இப்போது அனுமதி வழங்கியுள்ளது.

குவைத்தில் ஜப்பானிய தூதரகத்தை ஆக்கிரமித்துக்கொண்டுள்ள ஆயுதம் தரித்த பயங்கர வாதிகளை ஏற்றிக்கொண்டு செல்வதற்காகவே இந்த விமானம் குவைத் வருகின்றது.

இந்த விமானம் வந்ததும் ஜப்பானிய தூதரக ஆட்களை விடுவிப்பதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

குவைத்திலிருந்து இந்த விமானம் எங்கு புறப்பட்டுச் செல்லும் என்பது தெரியவில்லை.

## யு. எஸ். தளங்களுக்கு ஜாப். எண்ணெய்ச் 'சப்ளை இல்லை

(டோக்கியோ, பெப். 8

கடந்த மாத மத்தியிலிருந்து ஜப்பானிலுள்ள அமெரிக்கத் தருப்புகளுக்கும் ராணுவத் தளங்களுக்கும் எரிபொருள் சப்ளை செய்வதை ஜப்பான் நிறுத்திவிட்டது.

எண்ணெய் நெருக்கடி காரணமாக இந்நவடிக்கை எடுக்கப்பட்டதென்று தேசிய பாதுகாப்புச்சபை கூறியுள்ளதாக ஒரு பத்திரிகைச் செய்தி வலியுறுத்தியுள்ளது.

ஜப்பானிய மண்ணில் மொத்தம் 65,000 ராணுவ வீரர்களைக் கொண்ட 180 அமெரிக்க ராணுவத் தளங்களும் கேந்திரங்களும் உள்ளன. "டோக்கியோ ஷிம்பன்" பத்திரிகையின்படி அமெரிக்க ராணுவத்திற்கு ஜப்பானிய எண்ணெய் கம்பெனிகள் வருஷத்திற்கு 10 லட்சம் கிலோ லிட்டர் எண்ணெயை சப்ளை செய்தன.

## குஜராத்தில் 4 மந்திரிகள் பதவி நீக்கம்

(புதுடில்லி, பெப். 8

குஜராத்தில் 4 மந்திரிகளை முதலமைச்சர் திரு. பட்டேல் தமது மந்திரிசபையிலிருந்து விலக்கியுள்ளார்.

குஜராத்தில் ஏற்பட்டுள்ள உணவுத்தட்டுப்பாடுகளை யும் விலைவாசி ஏற்றங்களையும் ஆதரித்து நடைபெறும் ஆர்ப்பாட்டங்களை இந்த மந்திரிகள் ஆதரித்திருப்பதால் இவர்களை மந்திரி சபையிலிருந்து முதல்வர் நீக்கியுள்ளார்.

பட்டேல் அரச பதவியிலிருந்து விலகவேண்டும் என்று இந்த நான்கு அமைச்சர்களும் கோரிக்கை விடுத்தனர்.

இவர்கள் அரசாங்கத்தில் இருந்துகொண்டே அதனை [illegible] முயல்கிறார்கள் என்று முதல்வர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்த நால்வரில் மூவர் கபினட் அங்கத்துவம் உடையவர்கள். ஒருவர் உதவி மந்திரி.

இதேசமயம் குஜராத்தில் மாநில அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்றக் குற்றச்சாட்டை முதல்வர் மறுத்துள்ளார்.

இதற்கிடையில் குஜராத்தில் பல இடங்களில் நேற்றும் வன்முறைகள் நடைபெற்றுள்ளன. ஓர் இடத்தில் பொலிசார் 24 ரவுண்டுகள் சுட்டார்கள். இதில் 5 பேர் காயமடைந்தனர். ஊர்தகளிலும் [illegible] கள் ஏற்பட்டுள்ளன.

# பிரிட்டிஷ் ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டது'

## பெப்ரவரி 28-ல் பொதுத்தேர்தல்

லண்டன், பெப். 8

பிரிட்டனில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது பொதுத் தேர்தல் இம்மாதம் 28-ம் திகதி நடைபெறும்.

பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவதற்கு பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. எட்வார்ட் ஹீத் தீர்மானித்துவிட்டார்.

பிரிட்டனில் சமீக காலமாக ஏற்பட்டுள்ள தொழில் நெருக்கடிகளையும் எண்ணெய் விலை யேற்றத்தையும் காரணமாக வைத்துஆட்சிமன்றத்தை திரு. ஹீத் கலைப்பதற்கு மகாராணிக்கு யோசனை கூறியுள்ளார்.

பிரிட்டனில் என்றுமே இல்லாதபடி இப்பொழுது தொழில் நெருக்கடியொன்று உருவாகியுள்ளது. இதற்கிடையில் அடுத்த ஞாயிற்றுக்கிழமை பொதுவேலைநிறுத்தம் ஒன்றை நடத்துவதற்கு சுரங்கத் தொழிலாளர்கள் முடிவுசெய்திருக்கிறார்கள். இதுஏற்கனவே இருக்கும் நிலைமையை மேலும் மோசமாக்கிவிடக்கூடும் என்று அஞ்சப்பட்டது. இந்த நிலைமையில் பொதுமக்களின் தீர்ப்பொன்றைபெற்று நிலைமைகளை எதிர்நோக்குவதென்று பிரதமர் ஹீத் கருதியுள்ளார். எனவே மேலும் 5 ஆண்டுகளுக்கு நாட்டை ஆள்வதற்கு அதிகாரம் தரும்படி கோரி மக்கள் முன்செல்ல அவர் முடிவு செய்துள்ளார். இதன் காரணமாக வேலைநிறுத்தமுடிவைக் கைவிடும்படி அவர் சுரங்கத் தொழிலாளர்களைக் கேட்டிருக்கிறார். இதுபற்றி ஆலோசிப்பதற்கு சுரங்கத் தொழில் யூனியன் தலைவர்கள் இன்று கூடுகிறார்கள்.

பிரிட்டனில் உத்தியோகபூர்வமான தேர்தல் பிரசார வேலைகள் இன்று ஆரம்பமாகின்றன. பொதுத்தேர்தல் 28ம் திகதி நடைபெறும்.

50 ஆண்டு காலத்தில் இதுவே மிகக்குறுகிய காலத்தில் நடைபெறும் தேர்தல் என்று கூறப்படுகின்றது.

கன்சர்வேடிவ் கட்சியின் சர்ச்சைக்குரிய உறுப்பினரான திரு. ஈனொக் பவல் தமது தொகுதியில் பிரசாரவேலைகளில் ஈடுபடப்போவதில்லையென்று அறிவித்துள்ளார்.

வெள்ளையர் அல்லாதவர்கள் குடியேற்றப்படுவது சம்பந்தமாக கடினமான கருத்துக்களைக் கொண்ட இவர் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளையும் சமீபகாலமாகக் கண்டித்து வந்துள்ளார்.

## வட கடலில் எண்ணெய் வளம்

(லண்டன், பெப். 8)

வட கடல் பிரதேசத்தில் பெருமளவில் எண்ணெய் வளம் இருப்பதாக பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

இப்பகுதியில் கடலுக்கடியில் சுமார் 900 மைலுக்கடியில் எண்ணெய் இருப்பதாகவும் இதனைப் பயன்படுத்தினால் பிரிட்டனின் எண்ணெய்த் தேவையில் அரைப்பகுதியைப் பூர்த்திசெய்ய முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

விதைக்கப்பட்ட

## உருளைக்கிழங்குகளை திருடினார்களாம்

அல்லியங்காடு, வெள்ளி

உருளைக்கிழங்கு திருடியதாகக் கருதப்படும் ஒருவர் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் திருநெல்வேலி இராமலிங்கம் வீதியில் உள்ள தோட்டமொன்றில் நடைபெற்றது.

இத்தோட்டத்தில் விதைத்து 40 நாட்களேகூட ஆகாத முளைக்காத விதைகிழங்குகளை மூன்றுபேர் கிளறிச் சேகரித்துக்கொண்டிருந்தார்களாம் இதனை அவதானித்த அயலவர் ஒருவர் தோட்டச் சொந்தக்காரருடன் அவ்விடத்திற்கு விரைந்தபோது இருவர் ஓடித் தப்பித்துக்கொண்டனர். மரத்தில் ஏறி ஒளித்திருந்த ஒருவரைப் பிடித்து நல்லூர்ப் பொலிசில் ஒப்படைத்தனர்.

## ஜோர்டானில் மோதல் இல்லையாம்

(அம்மான், பெப். 8)

ஜோர்டானில் ராணுவம் பிரிவுகளுக்கிடையில் மோதல் ஏற்பட்டிருப்பதாக கூறப்பட்டதை அரசாங்கம் மறுத்துள்ளது.

ராணுவத்தினர் தமக்கு அதிக சம்பளமும் வசதிகளும் வேண்டும் என்றே அவர்கள் கோரியுள்ளனர் என்று அரசாங்க அறிவித்தல் கூறுகின்றது.

## எகிப்திய அதிபர் இந்தியா வருகிறார்

புதுடில்லி, பெப். 8

எகிப்திய அதிபர் அன்வர் சதாத் இம்மாதம் 24ம் திகதி இந்தியாவுக்கு வரவிருக்கிறார் இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியின் [illegible] சாரத் இந்தியாவுக்குவருகிறார்.

சமீபத்தில் இந்தியாவுக்கு வந்திருந்தபோது இந்திய மக்களும் அரசாங்கமும் அளித்த வரவேற்புக்காக யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ நன்றி தெரிவித்து இந்திய ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

## "தொலைபேசி வருமானம் இரட்டிப்பு"

(புங்குடுதீவு, வெள்ளி)

"தொலைபேசித் தொடர்புகள் மூலம் மாதம் 30 ஆயிரம் ரூபாவாக இருந்த அரசின் வருமானம் தற்போது 60 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது. தபால்-தந்தி அமைச்சின் திறமையான செயற்பாட்டிற்கு இது தக்க எடுத்துக்காட்டாகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலும் 800 மேலதிக தொலைபேசிகள் இணைக்கப்படவுள்ளன"

இவ்வாறு குறிப்பிட்டார் தபால்-தந்தி அமைச்சின் யாழ்ப்பாண மாவட்ட அத்தியட்சகர் திரு. எஸ். சமரசிங்கா. காரைநகர் வியாவில் புதிய உபதபால் நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே திரு. சமரசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். வட்டுக்கோட்டை எம். பி திரு. ஏ. தியாகராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சமரசிங்கா மேலும் பேசுகையில், கடந்த ஆறுமாதக் காலமாக சீரற்றிருந்த யாழ்-கொழும்பு தொலைபேசிச் சேவை தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது. பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, அச்சுவேலி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் புதிய தொலைபேசிச் சேவை நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. இம்மாவட்டத்தில் மேலும் பல உபதபால் நிலையங்களை நிறுவவும், அதிகளவில் தபால்பெட்டிகளை இப்பகுதிகளில் வைக்கவும் தபால்-தந்தி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றார். (அ)

## கிளிநொச்சில் இலவச பால்மா இல்லை

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் இப்பொழுது இலவசப் பால்மா விநியோகம் செய்யப்படுவதில்லை.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இப்பால்மா விநியோகிக்கப்படுகிறது. ஆனால் இப்பகுதிகளில் விநியோகம் நடைபெறாததால் ஏழைப்பிள்ளைகள் இலவசமாகப் பால்மா பெறும் வாய்ப்பை அற்றவர்களாகின்றனர். (ஈ)

## வீடு தீக்கிரை! இருவரை பொலிஸ் தேடுகிறது

வண்ணார்பண்ணை, வெள்ளி

வீடு தீக்கிரையானதகல் வீட்டிலிருந்த ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து சாம்பராகியது. செவ்வாய்க்கிழமை இரவு மண்டைதீவு தெருவில் நடந்த இச்சம்பவம் பற்றி யாழ். பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜே. எஸ். செல்வராசா சாட்சியங்களைப் பதிவுசெய்துள்ளனர்.

பகைமை காரணமாக இந்நாசவேலை நடைபெற்றுள்ளதாகப் பொலிஸில் புகார்செய்யப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதியைச் சேர்ந்த இருவரைப் பொலிசார் தேடிவருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய அரசுப்பேரவையிலிருந்து ~~~~~~ எஸ். எம். கோபாலரத்தினம்

# 'பொலிஸ்ராஜ்யம்' அமைக்க அரசு முயல்கிறதாம்

## திருத்த மசோதா மீது எதிர்க்கட்சி வாதம்

தேசிய அரசுப்பேரவை இன்று பிற்பகல் சபாநாயகர் திரு. ஸ்ரான்லி திலகரத்ன தலைமையில் கூடியபோது கேள்வி நேரத்தின் பின் பொலிஸ் (திருத்தம்) சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பின்மீது சுவையான விவாதம் நடைபெற்றது.

எந்தப் பிரச்னையின் மீதும் விவாதத்தை ஆரம்பிக்கத் தயங்காத காலிப் பிரதிநிதி டாக்டர் தகநாயகாவே இதையும் தொடக்கினர்.

இந்தத் திருத்தமசோதாவை இரண்டாவது முறையாக வாசித்த பிரதி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஸ்மன் ஜயக்கொடி இப்போதுள்ள முறையின்படி பொலிஸ் றிசர்வ் படை ஒரு குறிப்பிட்ட பகுதிகளில்தான் இயங்கமுடியுமென்றும் றிசர்வ் படையினருக்குப் போதிய பயிற்சி இப்போது அளிக்கப்படுவதில்லையென்றும் தெரிவித்து ஒழுங்கான பொலிஸ்படையுடன் றிசர்வ் படையையும் இணைக்கவே தாங்கள் முயற்சிசெய்வதாகவும் அம்பாறையில் பொலிஸ் றிசர்வ் படை பயிற்சிநிலையம் அமைக்க உத்தேசித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரதிபாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் மிகச் சுருக்கமாக விளக்கம் அளித்ததால் தானே என்னவோ காலிப் பிரதிநிதி டாக்டர் தகநாயகாவும் நிக்கவரட்டியப் பிரதிநிதி திரு. முதியான்சே தென்னக்கோனும் நீண்டநேரம் பேச முன்வந்தனர்.

றிசர்வ் பொலிஸ் படையின் தளபதியை யார் நியமிப்பது என்ற கேள்விக்கு மசோதாவில் விளக்கமில்லையென்று கூறிய டாக்டர் தகநாயகா இந்த மசோதாவின்படி அமைக்கப்படவிருக்கும் றிசர்வ்படை மற்றொரு தனியான பொலிஸ் படையாக அமையுமென்றும் ஏன் இதற்கு அவசியமென்றும் கேட்டார்.

பிரதி அமைச்சர் திரு. லக்ஸ்மன் ஜயக்கொடி இடை இடையே விளக்கம் கொடுக்க முனைந்தாராயினும் காலிப் பிரதிநிதி அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

இந்தநாட்டில் ஒரு பொலிஸ் ராஜ்யம் அமைக்கும் அபட நோக்கத்துடனேயே இந்தத் திருத்தமசோதா கொண்டுவரப்பட்டுள்ளது என்று தெரிவித்த டாக்டர் தகநாயகா தாம் இதைஎதிர்பார்ப்பதாகக் கூறிமுடித்தார்.

### காந்தி குல்லாயுடன்

அடுத்து நிக்கவரெட்டியாப் பிரதிநிதி திரு. முதியான்சே தென்னக்கோன் காந்திக் குல்லாய்அணிந்தபடியே தமது வாதத்தை எடுத்துச் சொல்ல ஆரம்பித்து நாட்டின் கடந்த காலச் சம்பவங்களிலிருந்து முன்னெப்பொழுதுமில்லாதவாறு ஆயுதப்படைகளுக்குப் பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகிறதென்றும் இந்த றிசர்வ் பொலிஸ்படை அமைக்கும் யோசனை மறுபரிசிலனை செய்யப்படவேண்டுமென்றும் கூறினர்.

திருத்தமசோதாவின் சில பகுதிகளின் விளக்கம் சரியாக இல்லையென்று திரு. தென்னக்கோன் எடுத்துக்காட்டிக்கொண்டிருந்த பிரதியமைச்சரும் நீர்ப்பாசன நெடுஞ்சாலை அமைச்சருமான திரு. மைத்திரிபாலசேனநாயகா, நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா, கலவான எம். பி. திரு. சரத்முத்தெட்டுவேகம ஆகியோரும் இடையிடையே குறுக்கிட்டு விளக்கமும் பதில் விளக்கமும் கொடுத்தனர்.

ஊர்காவற்றுறைப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினமும் மசோதா சம்பந்தமாக மட்டும் பேசினர்.

பொலிஸ் சட்டம் திருத்தப்படுவதாக இருந்தாலும் புதிய முறையிலே புதிய பொலிஸ் படையொன்றை அமைப்பதாகவே இது உள்ளது. அவசரகாலநிலைமையிலுள்ளது இந்த நிலையிலும் அமைதியையும் சட்டத்தையும் நிலைநாட்ட முடியாததால்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

### மேலும் தொல்லை ஏற்படலாம்

பொலிஸ்படையினரால் ஏற்கனவே பொதுமக்களுக்குத் தொல்லைகள் இருக்கின்றது. சேமப்படையினரால் மேலும் தொல்லைகள் ஏற்படலாம்.

இப்பொழுதும் இந்த அரசாங்கத்துக்குத் தொல்லை கொடுப்பது பொலிசார் தமது சொந்தப் பிரச்னைகளை நிறைவேற்றிக்கொள்ளும் போக்கினால்.

சேமப்படையினர் நிரந்தரப் பொலிசிலுள்ளவர்களைப் போன்று பொதுமக்களுடன் அதிக தொடர்பில்லாதவர்களாக இருக்கமாட்டார்கள். இடையிடையே சேவைக்கு அழைக்கப்படும் சேமப்படையினர் கட்சி, சொந்தக் கோபதாபங்களை நிறைவேற்றி மேலும் அரசுக்குதொல்லையாக இருக்கும்.

அமைச்சரவைதான் நியமனம் செய்வதாகச் சொல்லப்பட்டாலும் [illegible] யாவும் கட்சி அடிப்படையில்தான் செய்யப்படுகின்றன. இதனால் இந்தச் சேமப்படையும் ஒரு கட்சிப் படையாகத்தான் அமையும்" என்று பண்டிதர் கூறினர்.

நாட்டின் இன்றைய நிலைமையில் ஏர் பிடிக்கும் படையொன்றை அமைக்க ஒரு மசோதா கொண்டுவந்திருந்தால் பாராட்டலாம் ஆனல் ஏர்பிடிப்பதற்கு மாருகத் துப்பாக்கி பிடிக்கும் படையமைப்பதை எப்படி ஆதரிக்க முடியுமென்று கேட்ட பண்டிதர் பல - யினால் நிர்வாகம் செய்ய முடியாது நீதிநியாயத்தினால் தான் நல்லாட்சி நடத்த முடியுமென்று அர்த்தப்படும் குறள் ஒன்றைச் சொல்லித் தமது பேச்சைச் சுருக்கமாக முடித்துக்கொண்டார்.

### தவருன அர்த்தம்

கொழும்பு மத்திய தொகுதி முதலாவது பிரதிநிதியான ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகர் திரு. ஆர். பிரேமதாசா வழமையான கணீர் என்ற குரலில் மசோதாவில் சில ஷரத்துக்கள் ஆங்கிலவாசகத்துக்கும் சிங்கள வாசகத்துக்கும் தவருன அர்த்தம் கொடுக்கக்கூடிய மயக்கமானதாக அமைந்துள்ளனவென்பதை எடுத்து விளக்கிக் கூறினர். இந்த றிசர்வ் படை இப்போது அவசியமில்லையென்றும் இப்படையினால் நன்மையைவிட நாட்டுக்கும் மக்களுக்கும் தீமையே அதிகமாக இருக்குமென்றும் கூறிய திரு. பிரேமதாசா 1970ம் ஆண்டில் பொலிஸ், இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவைகளுக்குச் செலவிடப்பட்ட பணத்தைவிட இவ்வாண்டில் பொலிஸ் படைக்கு மட்டும் அதிகம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் புள்ளிவிபரங்களுடன் எடுத்துக்காட்டி வாதிட்டு இந்த திருத்த மசோதாவை வாபஸ் பெறுங்கள் அல்லது மறுபரிசிலனை செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

திரு. பிரேமதாசா தமது பேச்சின்போது அரசாங்கத்துக்கெதிராகத் தாங்கள் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்துள்ளதையும் தொட்டுச் சென்ருர்.

திரு. பிரேமதாசா, கலவான எம். பி. திரு. சரத்முத்தெட்டுவேகம நிந்தாவூர்ப் பிரதிநிதி ஜனப் எம். எம். முஸ்தபா ஆகியோர் பொலிஸ் சட்டத் திருத்த மசோதாவை ஷரத்து ஷரத்தாக எடுத்துவிவாதித்தனர்.

### ஜனநாயகத்துக்கு எதிராகப் பயன்படும்

இந்த றிசர்வ் படை அமைதி பதற்குப் பயன்படுத்தப்படும் சட்டங்களே மக்களுக்கெதிராகவும் எம். பி.க்களுக்கெதிராகவும் அரசுக்கெதிராகவும் ஏன் ஜனநாயகத்துக்கெதிராகவும் இடிரென்று ஒருநாள் பயன்படுத்துவதைப் பார்க்க நேரிடுமென்றும் மிகப்பயங்கரமான மசோதா இது பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்துமென்றும் ஜனப் மூஸ்தபா எச்சரித்து இதை வாபஸ்பெறும்படி ஆலோசனை கூறினர்.

இந்தத் திருத்த மசோதா மீது அரசாங்கத் தரப்பில் பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சரும் நீதி அமைச்சருமான திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகாமட்டுமே பேசினர்.

வழமையான தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்க்கட்சியினரின் வாதங்களை ஒவ்வொன்ருக எடுத்துக்காட்டி அவர்களின் வாதங்கள் பொருத்தமற்றவை என்று சொன்னதுடன் இடையிடையே ஐக்கியதேசியக் கட்சியினருக்கும் குத்தல் விட்டார்.

### தீமை இல்லை

இந்த மசோதாவைப் பயங்கரமென்றும் ஆபத்தானதென்றும் சிலர் குறிப்பிட்டனர். ஆனல் இதில் என்ன ஆபத்தோ பயங்கரமோ இருக்கிறதென்று தெரியவில்லை.

இப்போதுள்ள பொலிஸ் படைக்கும் றிசர்வ்படைக்கும் புதிய அமைப்பில் சிறு வித்தியாசமிருக்கலாம். ஆனல் இதனால் என்ன பெரிய தீமை வந்துவிடப்போகிறதென்று அவர் கேட்டார்.

மாலை 6-30 க்கு வாக்கெடுப்புக்கு விடப்பட்டு மசோதா நிறைவேறியது.




## இன்றைய பலன்

தை மீ 27-ந் திகதி
(9-2-74)

மேஷம்: மெத்தவும்பொருள் சேரும். கேலிடத்து ஆதரவும் தப்பாமல் கிட்டும். தேனுன வாழ்வும் உண்டு.

ரிஷபம்: அவசரம் வேண்டாம். ஆயுதபீடைக்கிடமுண்டு. நில், நிதானி. அமைதி உன் காலடியில்.

மிதுனம்: இடர்கள் பல தாக்கும். இதயத்தில் எரிமலை குமுறும். உதவி செய்யப் போய் உபத்திரவத்தை அணைத்துக்கொள்வீர்.

கடகம்: எண்ணம் போல் வாழ்வு இன்று மலரும் சிலருக்கு திடீர் திரவியலாபமும் கிடைக்கும்.

சிம்மம்! சூழ்ச்சியில் உச்சக் கட்டம் வேதனையில் ஆழ்த்தும் மிகுந்த சிந்தனையுடன் காரியத்தில் கண்வைப்பீர்.

கன்னி: உறவுகள்பலப்படும் உள்ளத்தில் உவகை துள்ளும் உயர்வுக்குவழிபிறக்கும். உவப்பான தினம்.

துலாம்: நல்லகாரியங்களை ஆரம்பிப்பதற்கு பொன்னுன தினம். தொழில் புரியுமிடத்தில் பாராட்டுக்கள் கிடைக்கும்.

விருச்சிகம்: தூரத்துச்செய்தியொன்று துயரத்தில் ஆழ்த்தும். பிணிக்கிடம் கொடாது உடல் நலத்தைப் பேணவும்.

தனுசு: கற்கண்டு போல் இனிக்கும் வாழ்க்கை காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு.

மகரம்: நினைத்தது நடக்காது. நிம்மதி பறக்கும் நெடும்பயணம் வேண்டாம். பொருள் தவறக்கூடும்.

கும்பம்: தந்தை வழி ஆதரவு தவருமல் கிடைக்கும். தடைகள் எல்லாம் தவிடு பொடி, தனிக்கொடி பயக்கும்.

மீனம்: [illegible] ஆர்வம் பிறக்கும் இதன் மூலம் புதிய பாதை திறக்கும். வெளியிடத் தொடர்புகளில் நல்ல திருப்பம் ஏற்படும்.

சோதிடக் கலாநிதி
[illegible]

## இந்தியப் பிரயாணிகளிடம் மன்ருர்ப் பாண்

(மன்ருர், வெள்ளி)

தலைமன்ருர்-இராமேஸ்வரம் கம்பல் சேவை நாட்களான செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் தலைமன்ருர் இறங்கு துறையில் உணவுத் தட்டுப்பாடு நிலவிவருவதின் காரணமாக இந்தியப் பிரயாணிகளிடம் பாண் பார்சலைக் காணக்கூடியதாகவிருக்கிறது. மன்ருரிலிருந்து சிலர் பாண் வாங்கி தலைமன்ருர் கொண்டு சென்று இந்தியப் பிரயாணிகளுக்கு விற்கின்றனர். (அ)

——

## திருட்டு வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், சனி

தண்ணீர் இறைக்கும் யந்திரத்தைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் திரு. பாலகிட்ணர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

ஆவரங்காலைச் சேர்ந்த பூதன் சரவணை என்பவரின் தண்ணீர் இறைக்கும் யந்திரத்தை புத்தூரைச் சேர்ந்த பண்டாரி கந்தசாமி என்பவர் திருடியதாக இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். சபாரத்தினமும், வழக்காளி தரப்பில் சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன், சட்டத்தரணி ஏ. எஸ். மரியாம்பிள்ளை ஆகியோர் ஆஜராகினர்கள். [ஜே-ஆ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்மாள் (கொட்டாஞ்சேனை)
தினசரி 4-30, 7 & 9-45
BUCK AND THE PREACHER
[சிட்னி பொயிட்டர் நடித்த சண்டைப்படம்]

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெமினி - ஜெயந்தி
புன்னகை

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - அசோகன்
ஜெயலலிதா - மனோரமா
நடித்த
எங்கள் தங்கம்

றியோ (நகர மண்டபம் யாழ்ப்பாணம்)
Daily 9-45 p. m.
Gregory Peck in
STALKING MOON

கடைசி வாரம்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30
முத்துராமன் - நிர்மலா - ஜெய்சங்கர் - நாகேஷ்
நீதி தேவன்

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஏ வி எம் ராஜன்
நிர்மலா
அவள்

ஸ்ரீதர் சினிமா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
ஜெமினி-சாவித்திரி
நடித்த
கந்தன் கருணை
[ஈஸ்ட்மென் கலர்]

RAJAH (Jaffna)
Daily 10-30, a. m. 4-45, 7-00 and 9-45 p. m.
Virginia, Francoise Sabian, Sheba
THE SPECIALIST
(Color-Sceep)

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி காலை 10-30, 2-30, 6-30, 9-30
* தமிழகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.
* தமிழ்த்திரை உலகிலேயே இதுவரை செய்யப்படாத புதுமை இந்தப்படத்தில் புகுத்தப்பட்டு இருக்கிறது.
சிவாஜி - கே. ஆர். விஜயா - முத்துராமன்
பாலாஜி - நாகேஷ் ராஜஸ்ரீ - மனோகர்
எம். ஆர். ஆர். வாசு நடித்த

ஸ்ரீவிநாயகா பிக்சர்ஸ் தயாரிப்பு
சொர்க்கம்
டைரக்ஷன் ராமண்ணா
ஈஸ்ட்மென் கலர்





லிடோ (யாழ்ப்பாணம்)
10-00, 2-00, 6-00, 9-30 மணிக்கு
ஆஷா பரேக்
ஹெலன்
நடித்த
காரவன்


# அமைச்சரின் உத்தரவின்றி தமிழில் சிறிய எழுத்து?

கொழும்பு, வெள்ளி

யாழ்ப்பாணத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களில் சிங்களத்தில் பெரிய எழுத்துக்களிலும் தமிழில் சிறிய எழுத்துக்களிலும் பெயர்ப் பலகைகள் எழுதப்பட்டிருப்பதாக நேற்று தேசிய அரசுப் பேரவையில் ஒத்தி வைப்புப் பிரேரணையின் மீது பேசுகையில் கிளிநொச்சித் தொகுதி எம். பி. திரு. கே. பி. இரத்தினமும், உடுப்பிட்டி தொகுதி எம். பி. திரு. ஜெயக்கொடியும் ஆட்சேபம் தெரிவித்தனர்.

சிங்கள எழுத்துக்களை 5 அங்குல அகலத்துக்கும் தமிழ், ஆங்கில எழுத்துக்களை 2 அங்குல அகலத்துக்கும் எழுதும்படி இ. போ. ச. மேலிடம் உத்தரவிட்டிருக்கின்றது என்று திரு. ஜெயக்கொடி கூறினார்.

இம்மாதிரி எதுவித உத்தரவும் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படவில்லையென்று போக்குவரத்து அமைச்சர் திரு லெஸ்லி குணவர்தன மறுத்தார்.

## அரசுக்கு எதிரானவர்களின் செயல் என்கிறார் லெஸ்லி

இ. போ. சபைக்கும், அரசுக்கும் கெட்டபெயர் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக சிலர் இப்படி பொய்யான தகவல்களைப் பரப்பியுள்ளார்கள் என்று அமைச்சர் கூறினார்.

மூன்று மொழி எழுத்துக்களும் ஒரே அளவில் இருக்க வேண்டும் என்பதே மேலிடத்தின் உத்தரவாகும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்கத் தரப்பிலிருந்து ஒருகுரல்:

'பஸ் பெயர்ப் பலகைகளில் உங்களுக்கு சம அந்தஸ்து கிடைத்து விட்டது.''

சில பஸ்களில் சிங்களத்தில் பெரிய எழுத்துக்கள் இருக்கக் கூடுமென்று அமைச்சர் ஒப்புக்கொண்டார். பஸ்கள் பழுதடைந்தால் அல்லது எரிக்கப்பட்டால் சிங்களப்பகுதியிலிருந்து பஸ்கள் அனுப்ப வேண்டி ஏற்படுகின்றது என்றார்.

தர்மலிங்கம்: பொலிசாரால் எரிக்கப்படும் போது.

பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்க: யார் பஸ்களை எரித்தார்கள் என்பதை காத்திருந்து பார்ப்போம்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்குள்ளேயே நெல் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்று திரு ஜெயக்கொடியும், திரு. இரத்தினமும் பிரச்னை கிளப்பினார்கள்.

கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டத்திற்குள்ளேயே இருக்கின்றது. ஆனால் இங்கிருந்து கூட தமது வீடுகளுக்கு விவசாயிகள் நெல்லை எடுத்துச்செல்ல முடியாமலிருக்கின்றது. இது மிகவும் அநீதியாகும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்க பதிலளிக்கையில் மாவட்டத்துக்கு மாவட்டம் நெல் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்றும் இவர்கள் தெரிவித்த புகாரினை விவசாய அமைச்சருக்கு தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

(இ. பி. ஏ.)

## உயர் நீதிமன்ற வழக்குரைஞர்



நவாலி மானிப்பாயைச் சேர்ந்த வித்தியாவதி குழந்தைவேலு இலங்கை உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள் திரு. ரி. டபிள்யூ. இராசரத்தினம், திரு. சி. பி வலகம்பாய ஆகியோரின் முன்னிலையில் உயர் நீதிமன்றத்தின் வழக்குரைஞராக சமீபத்தில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டப்பட்டதாரியான (எல். எல். பீ) இவர் மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம், மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியாவார்.

இவர் நவாலி மானிப்பாயைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் திரு. க. குழந்தைவேலு, திருமதி குழந்தைவேலு ஆகியவர்களின் புதல்வி.

## பாடசாலைக்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். 2-வது இன்னிங்ஸில் சென். பற்றிக்ஸ் 164 ஓட்டங்களைப் பெற்றது. ஏ. வி. ஜோர்ச் 34 ஓட்டங்களையும். ஈ. டி. கருணாகரன் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ். இந்து முதல் இன்னிங்ஸில் 140 ஓட்டங்களைப்பெற்றது. வை. நரேன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 68 ஓட்டங்களைப் பெற்றார். என். எஸ். ஜோர்ச்சும், எம். எம். இதயரூபனும் முறையே 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள். 2-வது இன்னிங்ஸில் யாழ். இந்துக் கல்லூரி 4 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 107 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இப்போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி. அ)


சாந்தி (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு பி. ப. 2-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
யார் நீ
ச. 4-15 ஞா 10-30
THEY ONLY KILL THEIR MASTERS

REGAL (Jaffna)
Daily 4-45, 7, 9-30 p.m.
Michael Caine
GET CARTER
(color)


வலி. மேற்கில்

## கருப்பநீர்த் தொழிற்சாலை

(வட்டுக்கோட்டை, வெள்ளி)

வலி. மேற்குப் பிரிவில் இயங்கிவரும் கள் பதனிடும் நிலையம், கருப்பநீர்த் தொழிற்சாலையொன்றையும் அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பிக்கவுள்ளது. — [அ]

(1ம்பக்கத் தொடர்ச்சி)

## பஸ்ஸுக்கும் குண்டுவீச்சு

அச்சுவேலி, சனி

தெல்லிப்பளையில் இ. போ. ச. பஸ் ஒன்றுக்கு நேற்றுக் காலை கைக்குண்டு வீசப்பட்டது. ஆயினும் அதில் பிரயாணம் செய்த சுமார் 60 பிரயாணிகளோ அதன் சாரதியோ கண்டக்டரோ காயமடையவில்லை. பஸ் சிறுசேதத்திற்குள்ளானது.

யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலைக்கு சென்றுகொண்டிருக்கையில் தெல்லிப்பளைச் சந்திக்கு அருகாமையில் பிரஸ்தாப பஸ் கைக்குண்டு வீச்சுக்கு இலக்கானது. இனம்தெரியாத நபர்களால் திடீரெனக்குண்டு வீசப்பட்டதை அடுத்து பஸ் மேற்கொண்டும் செல்லமுடியாதவாறு புகைமண்டலம் கிளம்பியதாயு எனினும் விபத்தெதுவுமின்றிச்சாரதி ஈ. தியாகராசாவின் திறமையினால் பஸ் நிறுத்தப்பட்டுப் பாதசாரிகளும் பிரயாணிகளும் காப்பாற்றப்பட்டதாகவும் தெரிகிறது.

குண்டுவீச்சுக்கு இலக்கான பஸ் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இருக்கிறது. சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. எம். சிவரத்தினம் தீவிரபுலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளார். யாழ் பொலிஸ் அதிபர் திரு. டபிள்யூ. ஆரியசிங்க, உதவி பொலிஸ் அதிபர் திரு. சந்திரசேகரா, தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் ஆகியோர் ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டனர்.

பஸ் சாரதியும், கண்டக்டர் எஸ் மகாலிங்கமும் வாக்குமூலமளித்தனர். [அ]

யாழ் அசம்பாவிதம்

## வல்வை ப. ச. கண்டனம்

[வல்வெட்டித்துறை, வெள்ளி]

கடந்த மாதம் 10-ம் திகதி இரவு நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டின் இறுதி நிகழ்ச்சியான பரிசளிப்பு வைபவத்தின்போது ஏற்பட்ட உயிர்ப்பலிகளுக்குக் காரணமாயிருந்த பொலிஸாரின் நடவடிக்கை குறித்து வல்வெட்டித்துறைப் பட்டினசபை கண்டனம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

குறித்த சம்பவம் பற்றிப் பகிரங்க விசாரணை ஒன்றினை நடத்தும்படி ஜனாதிபதியைக் கோரும் தீர்மானமும் சம்பவத்தின்போது உயிர் துறந்தவர்களின் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. (அ)

## சீனி விற்க மறுத்தாராம்

அச்சுவேலி, வெள்ளி

அச்சுவேலிப் பகுதியிலுள்ள கடையொன்றில் அச்சுவேலிப் பொலிசார் சிவில் உடையில் சென்று சீனி விசாரித்தபோது சீனி இல்லை என்று கூறியதைத் தொடர்ந்து திடீர்பரிசோதனையில் ஈடுபட்ட பொலிசார் அக்கடையிலிருந்து 374 ரூத்தல் சீனியைக் கைப்பற்றினர்.

இதுசம்பந்தமாக யாழ்ப்பாணம் நீதிபதி திரு. எஸ். பாலசிங்கம் முன்னிலையில் வழக்கு தாக்கல்செய்யப்பட்டபோது 200 ரூபா பிணைகட்டி 374 ருத்தல் சீனியும் கொடுக்கப்பட்டது.

## பொலிஸ் அதிபரானார்கள்

(கொழும்பு, வெள்ளி)

திருவாளர்கள் ரத்துநாயக்க, சிவக்குருநாதன், சமரவிக்கிரமா, இம்புல்தெனியா ஆகிய நான்கு உதவி பொலிஸ் அதிபர்களுக்கும் பொலிஸ் அதிபர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

திடநெஞ்சுள்ளவன் எந்தச்சந்தர்ப்பத்திலும் எவ ரிடமும் எதற்காகவும் கெஞ்சிக் கேட்டு இரக்கத்தை எதிர்பார்க்கமாட்டான்.

—ஔவையார்


# ஈழநாடு

(9 - 2 - 74)


## குடியரசா அல்லது குட்டி வல்லரசா?

பேசாலையில் தோண்டப்படும் எண்ணெய்க் கிணற்றிலிருந்து பெற்றோல் கிடைக்குமானால் இலங்கையும் குட்டி வல்லரசாக உலகில் திகழும் என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நம்பிக்கை தெரிவித்ததாகச் செய்தி.

எண்ணெய் ஆயுதத்தைப் பிரயோகிக்கும் அரபு நாடுகள் இன்று உலகில் உண்டு பண்ணிய நெருக்கடியைச் சுட்டிக்காட்ட பிரதமரின் பேச்சு உதவுகின்றது. இந்த நெருக்கடியால் வல்லரசுகளை நடுங்கப்பண்ணும்சக்தி இன்றைய உலகில் எண்ணெய்க்குண்டு. இருந்தும் நாம் ஒரு குட்டி வல்லரசாக வரவேண்டுமென்ற வரத்தைக் கேட்பது விவேகமா?

எண்ணெய் வளம் நம் நாட்டில் பொங்கிவழிய வேண்டுமென்று பிரதமர் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் நேர்த்திக்கடன் ஒன்றை வைத்திருப்பது பெரிதும் விரும்பத்தக்கது; நாட்டின் காவல் தெய்வங்கள் மக்களின் கவலையைத் துடைக்க எண்ணெய் வள ஆராய்ச்சிகைகூடவேண்டும்; அதேசமயம் எண்ணெய்ச் செல்வம் கிடைத்துவிட்டால் நாம் அதனால் செருக்குற்று மற்றவர்களுக்கு ஆபத்து உண்டு பண்ணும் முயற்சிகளிலிருந்து எம்மைக் காத்துக் கொள்ளவேண்டும்.

அமெரிக்கா பெரும் செல்வாக்குப்படைத்த வல்லரசு; செல்வச் செருக்கால், உலகின் பல பகுதிகளிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்திவர முயல்வதால், இன்று உலக சமாதானத்துக்கு அமெரிக்கா இடையூறாகஇருக்கின்றதே என்று பல நாடுகள் கருதுகின்றன; இருந்தும் இந்த மூதலசம் நம்பர்வல்லரசை அரபுநாடுகள் ஆட்டி வைக்கின்றன.

மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்டுவதற்கு அமெரிக்கா முயற்சித்துவருகிறது என்பது அமெரிக்க வெளிவிவகார மந்திரி டாக்டர் கிஸிங்கரின் கருத்து; இனியும் எண்ணெய் பகிஷ்கரிப்பை நீடிப்பது முறையற்ற செயல் என்றும், அராபியர்கள் தங்கள் எண்ணெய்த் தடையை நீக்காவிட்டால் அமெரிக்காவின் போக்கில் மாற்றம் ஏற்படுமென்றும் டாக்டர் கிஸிங்கர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

எண்ணெய் அரசியலை நன்கு விளக்கும் இந்த முரண்பாடான சூழ்நிலையிலும் பாதிக்கப்பட்ட அமெரிக்கா தனது கர்வத்தைக்காட்டத் தயாராகவிருப்பதைத் தெளிவுபடுத்துகிறது. அதே சமயம் இந்த வல்லரசை அடிபணிவச்செய்யும் ஆற்றல் அரபுநாடுகளுக்குஉண்டு என்பதையும், அந்த ஆற்றலை அரபுநாடுகள், குட்டி வல்லரசுகள் போன்று அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, தமக்கு ஆதரவான இலங்கை போன்ற நட்புநாடுகளுக்கும் எதிராகப் பாவிக்கின்றன என்பதையும் எண்ணெய் அரசியல் கற்பிக்கின்றது.

பணமிருந்தாலும் அரிசியையோ மாவையோ பெற முடியாத பருவத்தில், நாம் உணவுப் போரில் இறங்கியுள்ளோம்; உணவுஉற்பத்தியில் தன்னிறைவுகண்டால் அதனால் எவருக்கும் ஆபத்து ஏற்படாது. பசி பட்டினியிலிருந்து நீங்கி நாம் சமாதானமாக வாழமுடியும், அரிசியை ஓர் ஆயுதமாகப் பாவித்து மற்றுநாடுகளுடன் ஆதிக்கப்போட்டியில் ஈடுபடுவோமென்ற அச்சம் எவ்விதத்திலும் ஏற்படமாட்டாது.

பணமிருந்தும் எண்ணெயை வாங்கமுடியாத இன்றைய நெருக்கடியில், நாட்டுக்குத் தேவையான எண்ணெயை நாட்டுக்குள்ளேயே பெறும் பாக்கியம் கிடைத்துவிட்டால் நாம் தெய்வத்துக்குநன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். ஆனால் எண்ணெய் பெருக்கெடுத்து மட்டுக்கு மிஞ்சிய செல்வம் வரம்பெற்றும் தெய்வத்தையே மறந்து விடுவோமோ என்றஅச்சம் நமக்கிருக்கவேண்டும்.

சுதந்திர இலங்கை குடியரசாகப் பிரகடனம்பண்ணப்பட்டபின், நாட்டின் பிரச்னைகள் எல்லாம் தீர்ந்துவிடவில்லை. உண்மையில் குடியரசின் அரசியலமைப்பு நாட்டின் ஒரு பகுதி மக்களுக்கு விமோசனம் அளிக்கவில்லை என்ற விசனத்தைஉண்டு பண்ணிவிட்டது. இந்தநிலையில் குடியரசு குட்டி வல்லரசாக மாறும் வாய்ப்புப்பெற்றால், மேற்காசியாவில் அரபு நாடுகள் வகிக்கும் ஆதிக்கத்தைத் தென்கிழக்காசியாவில் நாம் வகிக்க நேரிடும்.

எண்ணெய் நெருக்கடியால் பலநன்மைகள் உண்டு. ஆறு மாதங்களில் என்ன முடிவு வருமோ தெரியாது. ஆனால் எண்ணெய் பொங்கி வழிந்து பெருக்கெடுக்க நேரிட்டால், நாம் குட்டிவல்லரசாக மாறும்முன் தெய்வம் எம்மைக் காக்கவேண்டும்!

# பாரிஸ் ஒப்பந்தம் பூரணமாக செயல்பட வேண்டும்

— நீர்வை —

வீரமிக்க வியட்னாமிய மக்கள் தமது மகத்தான தலைவர் ஹோ-சி-மின் தலைமையில் நீண்டகால யுத்தத்தை நடத்தி பிரெஞ்சு காலனி ஆக்கிரமிப்பாளரைத் தோற்கடித்தார்கள். அதன்பின் அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கெதிராக 18 வருடங்கள் தமது விடுதலையுத்தத்தை நடாத்தி வந்துள்ளார்கள். 1973-ம் ஆண்டு ஜனவரி 27ம் திகதி வியட்னாம் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தத்தில் அமெரிக்க அரசாங்கப் பிரதிநிதி தென் வியட்னாம் நியூ அரசாங்கத்தின் பிரதிநிதி, வட வியட்னாம் பிரதிநிதி, தென் வியட்னாம் தற்காலிகப் புரட்சி அரசாங்கத்தின் பிரதிநிதி ஆகியோர் கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது. ஆனால் இன்னும் தென் வியட்னாமில் யுத்தகாலநிலை நிலவிவருகின்றது. தொடர்ந்து தாக்குதல்கள் நடந்துவருகின்றன.

### யார் பொறுப்பாளிகள்?

அமெரிக்க அரசாங்கமும் அதனுடைய தென் வியட்னாம் சைகோன் அரசாங்கமும்தான் இந்த நிலைக்குப் பொறுப்பாளிகள். இவர்கள்தான் இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ச்சியாக மீறிவருகின்றார்கள். தென் வியட்னாம் தற்காலிகப் புரட்சி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் சைகோன் பொம்மை அரசாங்கத் துருப்புக்கள் தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடத்திவருகின்றன. விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்கள் மீது ஈவிரக்கமின்றிக் குண்டு மாரி பொழியப்பட்டதுடன் அநேக கிராமங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. 1973-ம் ஜனவரி 28-ம் திகதி தொடக்கம் 1973டிசம்பர் 15-ம் திகதி வரை சைகோன் நிர்வாகம் 301, 097 தடவைகள் பரிஸ் ஒப்பந்தத்தை மீறித் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இக்காலகட்டத்திற்குள் 6,000 பிரஜைகள் கொல்லப்பட்டனர்.

### அரசியற் கைதிகள்

தற்போது சைகோன் அரசாங்கத்திடம் 200,000 அரசியல் கைதிகள் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்பிலிருந்து இன்றுவரை சைகோன் அரசாங்கம் 36,000 மக்களைத் தடுப்புக்காவலில் வைத்து அவர்களைத் துன்புறுத்திவருகின்றது. தடுப்புமுகாம்களில் 920,000 மக்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இதனால் சைகோன் அரசாங்கம் பரீஸ் ஒப்பந்தத்தின் 11-வது சரத்தை மீறிச் செயல்படுகின்றது.

### அமெரிக்காவின் பங்கு

அமெரிக்க அரசாங்கம் தென் வியட்னாமின் உள்நாட்டு விவகாரங்களில்தலையிட்டுக்கொண்டிருப்பதுடன் தொடர்ந்து ராணுவ உதவியை சைகோன் அரசாங்கத்துக்குக் கொடுத்து வருகின்றது. அமெரிக்கா தனது துருப்புக்களை வாபஸ்பெற்றதே தவிர, அதனுடைய யுத்த தளபாடங்களைத் தென்வியட்னாமில் விட்டுச்சென்றது. அத்துடன் அது தொடர்ந்து சைகோன் அரசாங்கத்துக்கு ராணுவ உதவி கொடுத்து வருகின்றது.

1973—1974 அமெரிக்க பாதுகாப்பு வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் அமெரிக்கா சைகோன் அரசாங்கத்துக்கு 1,400,000 தொன் ஆயுதங்களையும் [illegible] 100,000 தொன்கள் அடிப்படையில் வழங்கியுள்ளது. பாரீஸ் ஒப்பந்தம் கைச்சாத்திட்டபின்பு அமெரிக்கா 720,000 தொன்கள் குண்டுகள், 135,000 தொன்கள் யுத்த தளபாடங்கள், 500 யுத்த விமானங்கள், 900 டாங்கிகள் கவசமோட்டார்கள், 200 பீரங்கிப் படகுகள், 600 பீரங்கிகள் ஆகியவற்றை சைகோன் அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளது. 24,000 அமெரிக்க யுத்த ஆலோசகர்கள் இன்னும் தென்வியட்னாம்பாதுகாப்பு அமைச்சிலும், பொலிசிலும் உளசேவையிலும் ஈடுபட்டு வேலைசெய்கின்றார்கள்.

### நிரந்தர சமாதானத்துக்கு வழி

வியட்னாமில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு பரீஸ் ஒப்பந்தம் பூரணமாக அமுல்படுத்தவேண்டும்.

1. அமெரிக்கா வியட்னாமின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை உடனடியாக நிறுத்தவேண்டும். அத்துடன் சைகோன் அரசாங்கத்துக்கு அமெரிக்கா கொடுக்கும் ஆயுத உதவிகளையும் ராணுவ தலையீட்டையும் உடனடியாக நிறுத்தவேண்டும்.

2. விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களில் சைகோன் அரசாங்கம் தனது ஆக்கிரமிப்புத் தாக்குதல்களை நிறுத்த வேண்டும்.

3. சைகோன் அரசாங்கம் சிறை வைத்திருக்கும் 200,000 அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலைசெய்யவேண்டும்.

4 தென்வியட்னாம் மக்களுக்கு பூரண ஜனநாயக உரிமைகளை சைகோன் அரசாங்கம் உடனடியாக வழங்கவேண்டும்.

வியட்னாம் யுத்த நிறுத்தம் சம்பந்தமான பாரீஸ் ஒப்பந்தத்தை பூரணமாக அமுல்படுத்தும்படி உலகத்திலுள்ள சமாதானத்தையும் விடுதலையையும் விரும்பும் மக்கள் அனைவரும்ஏகோபித்தக்குரலெழுப்பி அமெரிக்காவையும், சைகோன் அரசாங்கத்தையும்நிர்ப்பந்திக்க வேண்டும்.

### யாருடையது

கே. கே. எஸ். வீதியில் கண்டெடுக்கப்பட்ட திறப்புக் கோர்வை ஒன்று 171, மானிப்பாய் வீதியைச் சேர்ந்த கே. என். மீருன்சாகிப் என்பவரால் ஈழநாட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

0 0 0

நாவலர் வீதி சந்திரத்து ஒழுங்கையில் கண்டெடுக்கப்பட்ட ஐந்தாம் வகுப்புமாணவி ஒருவரின் பாடசாலை சூட்கேஸ் ஒன்று 7/3, யாழ். வீதியைச் சேர்ந்த நா. ஜெயசீலன் என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்துபெற்றுக்கொள்ளவும். (ஈ)

### சமயக்கல்வி நிலையம்

நல்லூர், சனி

நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் சமயக் கல்வி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிவானந்தர் இருவர் சமயக்கல்வி நிலையம் என்று இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது. முதலாம் வகுப்புத் தொடக்கம் 6-ம் வகுப்பு வரை இங்கு கற்பிக்கப்படுகிறது. [ஈ]


## மரண அறிவித்தல்

**தில்லையர்- கணபதிப்பிள்ளை**

புளியங்கூடலைச் சேர்ந்த தில்லையர் கணபதிப்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற ஐயாத்துரை, முருகேசு, தில்லையம்பலம், பார்வதி, நாகம்மா, கண்ணம்மா ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற வடிவேலு, செல்லப்பா, சுப்பிரமணியம், காலஞ்சென்ற நாகம்மா இராசம்மா, பரமேஸ்வரி, ஆகியோரின் மாமனாரும் ஆவர். அன்னாரின் ஈமைக்கிரிகள் இன்று 9 - 2 - 74 பி. ப. 1-00 மணிக்கு புளியங்கூடல் சுருவில் மயானத்தில் நடைபெறும். நண்பர்களும், உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். 193

## மரண அறிவித்தல்

**வைத்திய கலாநிதி இரத்தினசபாபதி**

திருநெல்வேலி கிழக்கு காலம் சென்ற வைத்தியர் கார்த்திகேசு பொன்னையா, நல்லநாயகி ஆகியோரின் மகன் வைத்திய கலாநிதி இரத்தினசபாபதி காலமானார் இவர் பாக்கியத்தின் அன்புக்கணவரும் கமலநாதன் (சட்டத்தரணி) டாக்டர் பாக்கியநாதன், பொன்னையா, சரோஜினிதேவி, சசிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாமதியின் மாமனாரும் ஆவர். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரிகைக்காக இன்று 9-2-74 சனிக்கிழமை 9 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

186





புகழ்

தத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.

புகழுடம்பு மேம்படுதலாகும் வாழ்வில் கேடும், புகழ் நிலைப்பதாகும் சாவும், அறிவில் சிறந்தவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு இல்லை.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்தில் [illegible] அச்சகத்தில் 1974-ம் ஆண்டு [illegible] 9-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது. The Eelanadu [illegible] P. Box. No. 49, Jaffna "Telegrams" ELANADU. இலங்கையில் [illegible] புதினப்பத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org